**தலைப்பு 269 – மட்டக்களப்பு மாவட்ட செயலகம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகம் தொடர்பான விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 15 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயன்முன்னேற்றம் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக பேணுவதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாவட்ட செயலகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு மீதான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடு**

**(அ) நிதி செயலாற்றல் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் மாவட்ட செயலகம் மற்றும் 14 பிரதேச செயலகங்களில் அடையாளம் காணப்பட்ட காணி 24 ஹெக்டெயராக மதிப்பிடப்பட்டு நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் இதன் பெறுமதி ரூபா 559 மில்லியன் ஆக குறிப்பிடப்பட்ட போதிலும் நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 487 மில்லியன் கூட்டுமொத்தமான காணிகளின் பெறுமதி குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ரூபா 72 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. எனினும், அவ்வாறான பிரதேச செயலகங்களிடமிருந்து காணியின் உரிமைத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பிரதேச செயலாளர்களுடன் ஒருங்கிணைப்பதற்கு மேலதிக அரசாங்க அதிபரிற்கு (காணி) அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | காணிகளின் உரிமைத்துவத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(ஆ) கணக்கீட்டு உத்தியோகத்தரின் சான்றுபடுத்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்டச் செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதாக பிரதான | எதிர்காலத்தில் பொருத்தமான நடவடிக்கை மூலம் இது சீர் செய்யப்படும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள |

| | | |
|---|---|---|
| கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக கண்காணிப்பதற்கு காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையினை செயற்றிறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். மேலும் அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததை உறுதிப்படுத்தும் கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 100 மில்லியன் நிதியேற்பாடு மூலதன செலவினங்களிற்காக ஒதுக்கப்பட்டிருந்தது, அதில் ரூபா 38 மில்லியன் தொகை மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது, அதற்கிணங்க ரூபா 62 மில்லியன் தொகை சேமிக்கப்பட்டிருந்தது. | நாட்டின் பொருளாதார நிலைமை காரணமாக தேவையான உபகரணங்களைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளோம். | நிதியாண்டின் போது செயற்திட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்துதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்வேறு நோக்கங்களுக்காக பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளில் ரூபா 186 மில்லியன் சேமிப்பு மீளாய்வாண்டின் இறுதியில் அவதானிக்கப்பட்டது. சேமிப்பு சதவீதம் 51 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக, பயண உரிமைக்கோரல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்ட ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் ஒதுக்கீடுகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.3 வைப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நான்கு பிரதேச செயலகங்களிற்குரிய காணி சுவீகரிப்பு தொடர்பான ரூபா 9.9 மில்லியன் தொகை குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் 2 வருடங்கள் முதல் 5 வருடங்கள் வரையான காலவீச்சில் வைப்பு கணக்கில் காணப்பட்டது. | சம்பந்தப்பட்ட நான்கு பிரதேச செயலகங்களில் சுவீகரிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. | நிதிப்பிரமாணம் 571 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் வைப்புக்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட விளைவு அடைந்துகொள்ளப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | எட்டு பிரதேச செயலகங்களுக்கு இஞ்சி பயிர்ச்செய்கைக்காக ரூபா 9.9 மில்லியன் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்த போதிலும் பௌதீக கணக்காய்வு பரிசோதனை அவதானிப்புக்களின் பிரகாரம் 767 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 7.4 மில்லியன் பெறுமதியான 12,385 கிலோகிராம் இஞ்சியானது இஞ்சியின் மோசமான தரம் மற்றும் வெள்ளத்தால் சேதமடைந்துள்ளது. இதன் விளைவாக மீளாய்வாண்டில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்கள் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இஞ்சியின் தரம் குறித்து விவசாய கள பயிற்றுவிப்பாளரால் சான்றளிக்கப்பட்டது. கனமழையால் இஞ்சிகள் சேதமடைந்தன. | தரமான பொருட்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மட்டக்களப்பில் உள்ள 14 பிரதேச செயலகங்களுக்கிடையில் பகிர்ந்தளிப்பதற்காக 1,351 ஆடுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. நான்கு பிரதேச செயலகங்களில் உள்ள பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 823,000 பெறுமதியான 823 ஆடுகள் பயனாளிகளிற்கு வழங்கப்படுவதற்கு முன்னர் | ஆடு விநியோகங்களை காப்புறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | பொது நிதிகள் சிக்கனமாகவும் செயற்திறனாகவும் பயன்படுத்தப்பட வேண்டும். |

காப்புறுதி செய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும் காப்புறுதி செய்யப்பட்டிருக்கவில்லை.
மேலும், ரூபா 19.86 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட 1,351 ஆடுகளில் ரூபா 2.85 மில்லியன் பெறுமதியான 194 ஆடுகள் கொள்வனவு செய்த திகதியிலிருந்து ஒரு மாதம் முதல் மூன்று மாதங்கள் வரையிலான காலப்பகுதியினுள் இறந்துள்ளதுடன் அந்த ஆடுகள் காப்புறுதி செய்யப்படாததால் ஏற்பட்ட நட்டத்தை அறவிட முடியாதிருந்தது.

## 3.2 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் முன்னேற்றமடையாத செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| காத்தான்குடி பிரதேச செயலகத்திற்கு 18 வீதி நிர்மாணங்களுக்காக கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சினால் கிராமிய வீதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 16 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது பிரதேச செயலகத்தினால் 14 வீதி நிர்மாணங்கள் விலக்கப்பட்டு ரூபா 3.7 மில்லியன் கிரயத்தில் 04 வீதிகளின் நிர்மாணங்கள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் ரூபா 12 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் போது குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படாமல் அமைச்சுக்குத் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. | குறிப்பாக காத்தான்குடி வீதி மதிப்பீட்டை தயாரிப்பதற்கான ஒன்லைன் பொதி (online package) குறிப்பிட்ட அமைச்சினால் ஆண்டின் பிற்பகுதியில் அனுப்பப்பட்டது. | ஒதுக்கீட்டை சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 நட்டங்களும் சேதங்களும்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ரூபா 7.2 மில்லியன் கூட்டுமொத்த நட்டங்களில் பதினைந்து சந்தர்ப்பங்களில் நிலைத்திருந்த ரூபா 2.1 மில்லியன் கூட்டுமொத்தமான நட்டங்கள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காததுடன் 6 சந்தர்ப்பங்களில் ரூபா 1.4 மில்லியன் நட்டங்கள் 02 முதல் 07 ஆண்டுகள் வரையான காலவீச்சில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் காணப்பட்டன. | முறையான விசாரணை நடைபெற்று வருகிறது. | நிதிப்பிரமாணங்கள் 102 முதல் 110 வரையானதற்கு இணங்க சேதங்கள் மற்றும் நட்டங்கள் அறவீடு செய்யப்பட வேண்டும். |

### 3.4 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மண்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கும் மட்டக்களப்பு மாநகர சபைக்கும் இடையில் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் மட்டக்களப்பில் புகையிரத குறுக்கு வீதியை விஸ்தரிப்பதற்கான புரிந்துணர்வு விஞ்ஞாபனம் ஒன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. எனினும், மண்முனை வடக்கு பிரதேச செயலகம் இனங்காணப்பட்ட ரூபா 309,304 மேலதிகக் கொடுப்பனவை மாநகர சபையிடம் இருந்து 2022 யூன் வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. மேலும், மண்முனை வடக்கு பிரதேச செயலகம் மட்டக்களப்பு மாநகர சபையுடன் கைச்சாத்திடப்பட்ட 23 சிவில் ஒப்பந்தங்களிற்குரிய ரூபா 1.47 மில்லியன் கூட்டுமொத்தமான மேலதிகக் கொடுப்பனவை அறவீடு செய்திருக்கவில்லை. | அடுத்த நிதிக் குழு கூட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | மேலதிக கொடுப்பனவுகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது பொருட்களின் கொள்வனவுகளிற்காக பல வழங்குநர்களின் பெயரில் ரூபா 9.7 மில்லியன் பெறுமதியான 13 காசோலைகள் எழுதப்பட்டிருந்த போதிலும் அக் கட்டளையிடப்பட்ட பொருட்கள் 05 பிரதேச செயலகங்களால் 2022 ஏப்ரல் 20 வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆகையால் பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு மன்னர் கொடுப்பனவுகளை மேற்கொள்வதன் மூலம் நிதி முகாமைத்துவத்தில் முறைகேடுகள் மற்றும் முறையற்ற தன்மைகளிற்கான வாய்ப்புக்கள் காணப்பட்டன. | பொருளாதார நெருக்கடி, சந்தையில் பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வு காரணமாக வழங்குநர்களால் சரியான நேரத்தில் பொருட்களை வழங்க முடியவில்லை. காசோலைகள் எழுதப்பட்டு பொருட்களுக்காக காத்திருக்கிறோம். | நிதிப்பிரமாண இல. 137 மற்றும் அரசாங்க பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கோறளைப்பற்று மத்திய பிரதேச செயலகமானது 0.3807 ஹெக்டெயர் அரச காணியொன்றை தனியார் ஒருவருக்கு மானிய அடிப்படையில் வழங்கியிருந்தது. எனினும் குறித்த காணி மானிய காணியின் நிபந்தனையை மீறி தொலைத்தொடர்பு கோபுரம் அமைப்பதற்காக தனியார் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும் அந்த மானிய உடன்படிக்கையை இரத்து செய்வதற்கு பிரதேச செயலகம் எந்த நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை. | தனியார் கம்பனி காணியை அபிவிருத்தி செய்திருந்ததால் அரச காணி சட்டத்தின் கீழ் நீண்டகால குத்தகைக்கான அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குத்தகை உடன்படிக்கையை இரத்து செய்து, குத்தகைதாரரிடம் இருந்து குத்தகையை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.6 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிமச் சட்டத்தின் 29 (அ) பிரிவின் பிரகாரம் தனிநபர் ஒருவருக்கு உரிமங்களை வழங்குவது தொடர்பாக நான்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. சுரங்கப் பகுதி கிராம அலுவலரால் அனுமதி வழங்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டு அந்த நான்கு கட்டுப்பாடுகளும் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியக விண்ணப்பப் படிவங்களில் அச்சிடப்பட்டுள்ளதுடன் அரசாங்க உத்தியோகத்தர்கள், மனநலம் குன்றியவர்கள் மற்றும் திவாலானவர் என அறிவிக்கப்பட்டவர்களுக்கு மணல் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட முடியாத போதிலும் அந்த நபர்களுக்கு இரண்டு மணல் அனுமதிப்பத்திரங்களை பிரதேச செயலாளர் பரிந்துரை செய்திருந்தார். | தற்போது, அரசாங்க உத்தியோகத்தர் மற்றும் மனநலம் குன்றிய நபர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் நிறுத்தப்பட்டுள்ளதுடன் மணல் அகழ்விற்கான அனுமதிப்பத்திரத்தை வழங்குதல் தொடர்பாக பின்பற்றுவதற்கு விரிவான பொறிமுறையொன்று வகுக்கப்பட்டுள்ளது. | மணல் அகழ்வு அனுமதிப்பத்திரம் மீது உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை தாபித்து வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கிரன் பிரதேச செயலகம் 52 அனுமதிப்பத்திரங்களை பரிந்துரைத்து புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்திற்கு அவற்றை அனுப்பியிருந்ததுடன் 26 அனுமதிப்பத்திரங்கள் மாத்திரமே வழங்கப்பட்டன. மீளாய்வாண்டிற்கு அகழ்வதற்கு 167,760 கியூப் மணல் அனுமதிக்கப்பட்ட போதிலும் அனுமதிக்கப்பட்ட அளவை விட 60,118 கியூப் மணல் அதிகமாக அகழப்பட்டுள்ளது. | அது தொடர்பாக நடவடிக்கையை எடுப்பதற்கும் உன்னிப்பாகக் கண்காணிப்பதற்கும் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | அனுமதிப்பத்திரத்திற்கான நிபந்தனைகளின் பிரகாரம் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிக்கு அரச வரி (royalty) அறவிடப்பட வேண்டும். |

## 3.7 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | **புதிய கட்டிட தொகுதி நிர்மாணம்** | | |
| (i) | புதிய கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்கான ஆலோசனை சேவைக்காக மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் மற்றும் கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் ஆகியோருக்கிடையில் 2014 ஒக்தோபர் 23 இல் புரிந்துணர்வு விஞ்ஞாபனம் (MOU) கைச்சாத்திடப்பட்டிருந்தது. எனினும், ஆலோசனை செயன்முறையில் பல்வேறு தாமதங்கள் ஏற்பட்டதால் 2015 ஒக்தோபர் 08 முதல் புரிந்துணர்வு விஞ்ஞாபனம் இடைநிறுத்தப்பட்டது. மாவட்ட செயலாளர் ரூபா 7.2 மில்லியன் கூட்டுமொத்தமான ஆலோசனை கட்டணத்தில் 40 சதவீதத்தை ஆலோசனையாளரின் வேலைத் தவறைக் கருத்தில் கொள்ளாமல் ஆலோசனையாளருக்கு செலுத்தியிருந்தார். | மத்திய கட்டிடங்கள் திணைக்களம் மாகாண கட்டிடங்கள் திணைக்களங்களால் தயாரிக்கப்பட்ட அளவிடைப் பட்டியலை ஏற்றுக்கொண்டுள்ளது. | நிலையான கேள்வி ஆவணத்திலுள்ள நிபந்தனைகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | புதிய செயலக கட்டிட தொகுதியை நிர்மாணிப்பதற்காக மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் மற்றும் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு (மத்திய) இடையே 2015 ஒக்தோபர் 14 இல் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் முகாமைத்துவ கட்டணங்களாக 3 சதவீதம் செலுத்தப்பட வேண்டிய போதிலும் 4 ஆவது விலைப்பட்டியல் வரை 5 சதவீதம் செலுாத்தப்பட்டிருந்தது. இதனால் ரூபா 2.2 மில்லியன் தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளது. | ஒப்பந்தம் நிறுத்தப்பட்டதால் மேலதிகக் கொடுப்பனவுகளை அறவீடு செய்ய முடியாதிருந்தது. | இவ் விடயங்களை விசாரணை செய்து மேலதிக கொடுப்பனவை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(iii) **தாமதக் கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| ஒப்பந்தத்தின் பொறியியலாளர் 2022 யூன் வரை ஒப்பந்ததாரரிடமிருந்து தாமதக் கட்டணங்களை அறவீடு செய்வதற்கோ அல்லது கழிப்பதற்கோ தவறியிருந்தார். இதன் விளைவாக, ரூபா 57 மில்லியன் தொகை அரசாங்கத்திற்கு நட்டமாக ஏற்பட்டிருந்தது. | காலப்பகுதிக்கான தாமதக் கட்டணம் கணிப்பிடப்பட்டது. | தாமதக் கட்டணங்களை அறவீடு செய்வதற்கு மேலும் தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(iv)

| | | |
|---|---|---|
| ரூபா 46 மில்லியன் முரண் பணிகளுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை ரூபா 13 மில்லியன் வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்ததாரர் உண்மையான அளவிற்காக இல்லாது எதிர்பார்க்கப்பட்ட அளவிற்காக மாத்திரம் முரணிற்கான அங்கீகாரத்தை கோரியிருந்தார். | பெறுகை வழிகாட்டல்களை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. மனித வளங்கள் முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை 1,687 ஆகவும், உள்ளபடியான பதவியணியினரின் எண்ணிக்கை 1,801 ஆகவும், மேலதிக பதவியணியினரின் எண்ணிக்கை 320 அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 12 சதவீதமாகவும் இருந்தது. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 10 நிர்வாக கிராம உத்தியோகத்தர் வெற்றிடங்களும், 23 பொது முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் வெற்றிடங்களும், 91 கிராம உத்தியோகத்தர் வெற்றிடங்களும் காணப்பட்டன. | கிராம உத்தியோகத்தர் மற்றும் பொது முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் இதுவரை நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | சேவைகளை செயற்திறனாக வழங்கும் பொருட்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிரந்தர உத்தியோகத்தர்களை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |